# இன்றைய செய்தி

## என் தோழி திட்டம்

- தெற்கு ரயில்வேயில் இயக்கப்படும் விரைவு ரயில்களில் தனியாக பயணிக்கும் பெண்களின் பாதுகாப்புக்காக, 'மேரி சஹேலி' எனப்படும் என் தோழி அமைப்பு 2020-ல் தொடங்கப்பட்டது.
- சென்னை, திருச்சி, சேலம், மதுரை, பாலக்காடு, திருவனந்தபுரம் ஆகிய 6 ரயில்வே கோட்டங்களில் ஆர்.பி.எஃப். பெண் அதிகாரிகள், காவலர்கள் அடங்கிய 17 குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- ரயில் புறப்படுவதற்கு முன்பாக, தனியாக பயணிக்கும் பெண்களின் தகவலைச் சேகரித்து, அவர்களிடம் நேரடியாக சென்று அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? எங்கு செல்கிறார்கள்? அவர்களின் முகவரி உள்ளிட்ட தகவல், பின்னர் பயணத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் ரயில்வே பாதுகாப்புப்படையின் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்ணை (139) வழங்குவார்கள்.

## க்வாட் நாடுகள்

- இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் 'க்வாட்' கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ளன.
- இணையவழி குற்றங்களைத் தடுப்பதற்காக கூட்டமைப்பின் நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம்.
- வெளிப்படைத்தன்மை நிறைந்த பாதுகாப்பான இணையவெளியை ஏற்படுத்துவதற்கு நாடுகள் உறுதியேற்கின்றது.

**பெரும் பாதிப்பு**

- இணையவழி குற்றங்களானது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சியையும் பாதுகாப்பையும் பாதிக்கின்றன.
- தேசியப் பாதுகாப்பு, நிதித்துறை, தொழில் நிறுவனங்கள், இணையக் கட்டமைப்புகள், தனிநபர்களின் தரவுகள் உள்ளிட்டவையும் இணையவழி குற்றங்களால் பாதிக்கப்படுகின்றன.
- இணையவழி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ள கூட்டமைப்பு நாடுகள் உறுதி ஏற்கின்றன.

## சப்தகோசி அணை திட்டம்

- நேபாளத்தில் உற்பத்தியாகி பிதார் வழியே இந்தியாவுக்குள் நுழையும் சப்தகோசி நதியில் அணை கட்டுவது தொடர்பான பணிகளை முன்னெடுக்க கூட்டத்தின் போது முடிவெடுக்கப்பட்டது.
- அணை கட்டுமானம் சார்ந்த பணிகள், நீர்த்தேக்கப் பகுதிகள், சமூக, சுற்றுச்சூழல் தாக்கங்கள் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.
- இந்தியா–நேபாளம் இடையே கடந்த 1996 ஆம் ஆண்டில் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின் கீழ் மஹாகாளி நதி, அதன் கிளை நதிகள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது.

## ஆபரேஷன் மேக சக்ரா

- இணையத்தில் நடைபெறும் சிறாருக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையில், பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள், மேலும் இக்குற்றத்தில் தொடர்புடைய பிற நபர்கள் உலகில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால், இக்குற்றங்களைக் கட்டுப்படுத்த சர்வதேச அளவில் பல்வேறு சட்ட அமலாக்க முகமைகளின் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.